www.tamilarangam.net

# ஈழ மக்களின் மீதான புலிகளின் பயங்கரவாதத்திற்கு எதிரான கண்டனக் கூட்டம்.

பேச்சாளர்கள்:

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி. NLFT

ஈழப்புரட்சி அமைப்பு. EROS

தமிழீழ விடுதலை இயக்கம். TELO

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம். PLOTE

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. EPRLF

ஈழப் பிரச்சார ஒன்றியம். ESC

ஆகிய அமைப்புப்பிரதிநிதிகளும், ஏனைய ஜனநாயக முற்போக்கு சக்திகளின் பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர்.

காலம் : 27.12.1986 சனி மாலை 6.00 மணி.

இடம் : SOUTHFIELDS METHODIST CENTRAL HALL,
423, DURNSFORD ROAD,
WIMBLEDON.

⊖ NEAREST TUBE: WIMBLEDON PARK, SOUTHFIELD. BUS 156

சமாதானத்தின் பகைவர்களை நிர்மூலம் செய்வோம்!

சமதர்ம ஈழத்தை நிர்மாணம் செய்வோம்!!

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மைக்காலங்களில் ஈழ விடுதலைப் போராட்டம் பாரிய நெருக்கடியை எதிர் நோக்குகின்றது. இஸ்ரேலிய அதிபர் அண்மையில் கொழும்புக்கு மேற்கொண்ட திடீர் விஜயத்தைத் தொடர்ந்து பாக்கு நீரிணையில் போக்குவரத்தை முற்றாகத் தடுப்பதற்குப் போதுமான நவீன விசைப் படகுகள் தருவதாகவும், மேலும் உடனடியாகத் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை உக்கிரப்படுத்துவதற்கான இராணுவ ஆலோசகர்களைத் தருவதாகவும் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

அமெரிக்க அரசு உத்தியோகபூர்வமாக இராணுவ உதவிகள் வழங்க இணங்கியுள்ளது.

பேச்சுவார்த்தை தொடர்கின்றது என்ற போலியான திரையின் பின்னால் பாசிச சிறீலங்கா அரசு அப்பாவி ஈழமக்களையும், எமது தேசத்தையும் முற்றாக அழித்துவிடலாம் என முனைப்புடன் செயற்படுகின்றது. சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசைப் பொறுத்தவரையில் நியாயமான தீர்வு என்பது ஈழ தேசமும், அனைத்து விடுதலைப் போராளிகளும் பூரண சரணாகதி அடைவதே என்பது தெரிந்ததே.

சிறீலங்கா அரசு, "தமிழீழக் கம்யூனிஸ்டுகள்" என்றும், "ஈழத்தின் குரல்" என்றும் இரண்டு ஒலிபரப்புச் சேவைகளை நடாத்தி போராளிகளிடையே பூசல்களை உருவாக்க முனைந்து வருகின்றது.

ஈழ விடுதலைப் போராட்டம், இன்று உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் எதிர்நோக்கும் ஆபத்துக்கள் இவ்வாறு இருக்கும் போது, புலிகள் இயக்கத்தினர் 13.12.1986 சனிக்கிழமை தொடக்கம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கும், EPRLF மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது, எமது விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துகின்றது. அத்துடன் எமது மக்களின் தியாகத்தால் வளர்க்கப்பட்ட போராட்டம் பல வருடங்கள் பின்நோக்கித் தள்ளப்படுவதுடன் சிறீலங்கா நவபாசிச அரசிற்கே சாதகமாக அமைகின்றது.

வெளிநாடுகளில் வாழும் தமிழ்பேசும் மக்கள் ஈழவிடுதலைப் போராட்டத்திற்குக் கணிசமான பங்கினை ஆற்றி வருகின்றனர். இந்த நிலையில் இன்று எமது போராட்டம் எதிர்நோக்கும் நெருக்கடி நிலையைப் போக்கி, எமது மக்களின் விடுதலை நோக்கிய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல, போராட்டத்திற்கும் அனைத்து ஜனநாயக முற்போக்குச் சக்திகளினதும் கரங்களைப் பலப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதி வெற்றி ஈழ மக்களுக்கே!!!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்